


# குயீன்ஸ்லாந்து பாலர்பள்ளி

## பாலர் பள்ளி என்றால் என்ன?

கிண்டி என அழைக்கப்படும் முன்பள்ளி, தயார்படுத்தல் நிலைக்கு முந்தைய ஆண்டிலுள்ள (குயின்ஸ்லாந்தில் பள்ளியின் முதல் ஆண்டு) பிள்ளைகளுக்கான ஒரு பகுதி நேரக் கல்வித் திட்டமாகும். கிண்டி என்பது உங்கள் பிள்ளை விளையாட்டு அனுபவங்கள் மற்றும் ஊடாட்டங்கள் ஊடாக தனது ஆரம்பகால கற்றல், நல்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்கு உதவும் விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஒரு இடமாகும். கிண்டியில் பங்கேற்பதன் மூலம், பிள்ளைகளின் கற்பதற்கான ஆர்வம் அதிகரித்து தயார்படுத்தலுக்கான நிலைமாற்றத்துக்கு உதவும்.

குயின்ஸ்லாந்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கிண்டி திட்டங்கள் ஒரு தகுதிவாய்ந்த பிள்ளைப் பருவ ஆசிரியரால் நடத்தப்படுகின்றன. ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி மையங்களில், பாலர் பள்ளிக்கான அனுமதியைப் பெறுவதில் தடைகள் காணப்படுகின்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புற மற்றும் பின்தங்கிய மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலப் பள்ளிகள் என்பவற்றிலும் மையமொன்றுக்குப் போக முடியாத சில பிள்ளைகளுக்கு தொலைக் கல்வி இ-கிண்டி (eKindy) முறையிலும் கிண்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட முடியும்.

## கிண்டியில் கற்றல்

கிண்டி இளம் பிள்ளைகளுக்கு பின்வரும் வாய்ப்புகளை வழங்குகின்றது:

- கருத்துக்களை, உணர்வுகளை, தேவைகளைக் கூறுவதற்கு மொழியைப் பயன்படுத்துதல்
- மற்றவர்களுடன் நண்பர்களாகி ஊடாட்டம் செய்து ஏனையோருடன் ஒத்துழைத்தல்
- பிரச்சினைகளை அடையாளம் கண்டு, பிரச்சினை தீர்க்கும் திறன்களை வளர்த்துக்கொள்ளல்
- தங்கள் திறன்களில் அதிக நம்பிக்கை கொண்டவர்களாகவும் சுயாதீனமானவர்களாகவும் மாறுதல்
- தங்கள் உலகுடன் தொடர்புபட்டு, அதனை ஆராய்ந்து, அதற்குப் பங்களிப்புச் செய்தல்
- தங்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவுவதற்காக அறிவைக் கட்டியெழுப்பி புதிய கருத்துக்களைக் ஆராய்தல்.

# சேர்வது எப்படி

குயீன்ஸ்லாந்தில், பிள்ளைகள் தங்கள் தயார்படுத்தலை ஆரம்பிப்பதற்கு முந்தைய வருடத்தில் கிண்டியில் சேரலாம். ஒவ்வொரு சேவையும் வித்தியாசமானது, சிலவற்றில் காத்திருப்புப் பட்டியல் இருக்கலாம், எனவே உங்கள் குழந்தையைச் சேர்ப்பதற்கான சிறந்த நேரத்தைப் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் தேர்ந்தெடுத்த சேவையுடன் பேசுவது நல்லது.

உங்கள் பிள்ளை கிண்டியில் பங்கேற்பதற்கு அவர் சேரும் வருடத்தின் ஜூன் மாதம் 30 தேதியில் 4 வயதுடையவராக இருக்க வேண்டும்.

| பிள்ளை பிறந்தது | பிள்ளை கிண்டிக்குச் சமுகமளிக்கலாம் |
|---|---|
| 2018 ஜூலை 1 முதல் 2019 ஜூன் 30 வரை | 2023 |
| 2019 ஜூலை 1 முதல் 2020 ஜூன் 30 வரை | 2024 |
| 2020 ஜூலை 1 முதல் 2021 ஜூன் 30 வரை | 2025 |
| 2021 ஜூலை 1 முதல் 2022 ஜூன் 30 வரை | 2026 |
| 2022 ஜூலை 1 முதல் 2023 ஜூன் 30 வரை | 2027 |
| 2023 ஜூலை 1 முதல் 2024 ஜூன் 30 வரை | 2028 |

உங்கள் பிள்ளையைச் சேர்ப்பதற்கு உங்களுக்கு என்ன தேவை:

- உங்கள் பிள்ளையின் பெயர் மற்றும் முகவரி
- அந்தப் பிள்ளையின் பெற்றோர், பராமரிப்பாளர் அல்லது பாதுகாவலர் என்ற வகையில் உங்கள் விவரங்கள்
- ஏதேனும் நீதிமன்ற உத்தரவுகள் அல்லது வளர்ப்பு உத்தரவுகள் அல்லது திட்டங்களின் விவரங்கள்
- தேவைப்படும் ஏதேனும் கூடுதல் ஆதரவு பற்றிய விவரங்கள் (எ.கா. ஊனம், உணவு ஒவ்வாமை அல்லது பிற தேவைகள்)
- பிறந்த தேதிக்கான சான்று (எ.கா. பிறப்புச் சான்றிதழ்)
- உடல்நலம் மற்றும் நோய்த்தடுப்பு நிலை
- உங்கள் பிள்ளையை அழைத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட நபர்களின் மற்றும் அவசரகாலத்தில் யாருக்குத் தகவல் கொடுக்க வேண்டிய நபர்களின் விவரங்கள்.

உங்கள் சேவை இந்தத் தகவல்களை இரகசியமாக வைத்திருக்கும் அதேவேளை உங்கள் பிள்ளையின் பதிவுகளுக்கான உங்களால் முழுமையாக அணுக முடியும்.

# கிண்டி திட்டமொன்றைத் தேர்வு செய்தல்

குயின்ஸ்லாந்தில் உள்ள அனைத்து பிள்ளைகளும் தயார்படுத்தல் நிலைக்கு முந்தைய ஆண்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட முன்பள்ளி திட்டத்தில் கலந்துகொள்ள தகுதி பெறுகின்றனர்.

ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாலர்பள்ளித் திட்டம் என்பது, அரசாங்க வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்யும், பின்வரும் பண்புகளைக் கொண்ட ஒரு திட்டமாகும்:

- அரசாங்க வழிகாட்டுதல்களின்படி, தகுதிவாய்ந்த ஆரம்ப பிள்ளைப் பருவ ஆசிரியர்களால் வழங்கப்படும் ஒரு கற்றல் திட்டம்
- தயாரிப்பு நிலைக்கு முந்தைய ஆண்டிலுள்ள பிள்ளைகளுக்காக பொதுவாக ஒரு வாரத்திற்கு 15 மணிநேரம், வருடத்திற்கு 40 வாரங்கள் நடத்தப்படும்
- குயின்ஸ்லாந்து பாலர்பள்ளி கற்றல் வழிகாட்டுதல் அல்லது பிற குயின்ஸ்லாந்து பாடத்திட்ட மற்றும் மதிப்பீட்டு அதிகாரியின் அங்கீகாரம் பெற்ற கற்றல் திட்டத்துடன் இணைக்கப்பட்டதாக இருக்கும்.

குயின்ஸ்லாந்து அரசாங்கத்தால்-அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை அடையாளம் காண உதவுவதற்கு, கீழே உள்ள படத்தில் உள்ள 'kindy tick of approval' ஐப் பார்க்கவும்.

# முன்பள்ளிக்கு எவ்வளவு செலவாகும்

2023 முதல், குயின்ஸ்லாந்து அரசாங்கம் பல குயின்ஸ்லாந்து குடும்பங்களுக்கு கிண்டியை மலிவாக மாற்றியுள்ளது. நீங்கள் ஒரு அமர்வு கொண்ட முன்பள்ளியில் சேர்ந்தாலும் அல்லது நீண்ட நாள் பராமரிப்பு கொண்ட முன் பள்ளியில் இணைந்தாலும் நீங்கள் இலவச கிண்டிக்கு அல்லது மலிவான கிண்டிக்கு தகுதி பெறலாம்.

சேவையைப் பொறுத்து கிண்டியின் கட்டணங்கள் மாறுபடும். கிண்டியின் கட்டணங்கள் பற்றிய விவரங்களுக்கு நீங்கள் விரும்பும் கிண்டியைத் தொடர்பு கொள்ளவும். நீங்கள் குறைந்த கட்டணத்தில் அல்லது இலவச கிண்டிக்கு தகுதியுடையவரா என்பதைச் சரிபார்க்க www.qld.gov.au/Kindysavings ஐப் பார்வையிடவும்.

வளர்ப்புக் குடும்பங்கள் உள்ளிட்ட பின்வரும் விடயங்களைக் கொண்டுள்ள தகுதியான குடும்பங்களுக்கு இலவச அல்லது விலைகுறைந்த கிண்டி வழங்கப்படும்:

- தற்போதைய ஆஸ்திரேலிய அரசு சுகாதார பராமரிப்பு அட்டையை (HCC) வைத்திருப்பவர்கள் (அல்லது அதனை வைத்திருக்கும் பிள்ளையை வைத்திருப்பவர்கள்)
- தற்போதைய ஆஸ்திரேலிய ஓய்வூதிய சலுகை அட்டையை வைத்திருப்பவர்கள் (தன்னியக்க HCC உரிமைகள்)
- படைவீரர் விவகாரத் துறையின் 'கோல்ட் அட்டை' (Gold Card) அல்லது 'வைட் அட்டை' (White Card) வைத்திருப்பவர்கள்
- HCC வழங்குவதற்கான எண்ணத்தைக் குறிப்பிட்டு தொடர்புடைய நிறுவனத்திடமிருந்து கிடைத்த கடிதம் போன்ற முறையான ஆவணமொன்றை வைத்திருத்தல்
- முறையான வளர்ப்பு அல்லது உறவினர் பராமரிப்பு ஏற்பாடுகளுக்கான சான்றுகளை வைத்திருத்தல்
- பழங்குடியினர் மற்றும்/அல்லது டோரஸ் நீரிணை தீவுவாசியாக (அல்லது அத்தகைய ஒரு பிள்ளையை உடையவராக) அடையாளம் காட்டுதல்
- ஒரே வயதுடைய மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரே ஆண்டில் சேர்க்கப்பட்டிருத்தல்
- முறையான வீட்டிற்கு வெளியேயான-பராமரிப்பு சிறுவர் பாதுகாப்பு ஏற்பாட்டில் வாழ்பவராக அடையாளம் காணப்பட்ட ஒரு பிள்ளையை உடையவராக இருத்தல்
- ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அகதிகள் மற்றும் மனிதாபிமான திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைந்திருத்தல் அல்லது புகலிடம் கோரும் செயல்முறையில் தற்காலிக விசாவைப் பெற்றவராக இருத்தல்.

இலவச அல்லது கட்டணம் குறைந்த கிண்டிக்கான மானியம் உங்கள் சேவை வழங்குநருக்கு நேரடியாக வழங்கப்படும். அது உங்களுடைய சொந்தப்பணச் செலவுகளைக் குறைக்கலாம். நீங்கள் பல அளவுகோல்களைப் பூர்த்தி செய்தாலும், அதை ஒரு முறை மட்டுமே உரிமை கோர முடியும்.

ஆஸ்திரேலிய அரசின்(Family Tax Benefit) குடும்ப வரிப் பயன்களுக்குத் தகுதியான குடும்பங்களும் குறைக்கப்பட்ட கட்டணங்களுக்குத் தகுதிபெறலாம்.

நீண்ட நாள் பராமரிப்பு அமைப்பில் கிண்டித் திட்டத்தில் பங்கேற்கும் பிள்ளைகளின் குடும்பங்களும் ஆஸ்திரேலிய அரசின் பிள்ளை பராமரிப்பு மானியத்திற்கு (Child Care Subsidy )தகுதி பெறலாம்.

இத்தகைய ஆஸ்திரேலிய அரசாங்க மானியங்களுக்கான தகுதி பற்றிய தகவல்களை 'சென்டர்லிங்'கில் (Centrelink) பெற்றுக்கொள்ள முடியும்.

## மேலும் தகவல்களுக்கு
Visit www.qld.gov.au/kindy

220233